www.tamilarangam.net

# ORGANIZATIONAL REPORT

NOVEMBER 1984 TO NOVEMBER 1985

EELAM SOLIDARITY CAMPAIGN
B.M.BOX 3009
LONDON WC1N 3XX

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தலைவர் அவர்களே!
விடுதலை இயக்கங்களின் பிரதிநிதிகளே!
E.S.C யின் அங்கத்தினர்களே!

எமது அமைப்பின் இரண்டாவது வருடாந்த பொதுக்கூட்டத்திற்கு வருகை தந்துள்ள உங்களை வரவேற்று,

கடந்த ஓராண்டாக என்னிடம் கையளிக்கப்பட்ட பணிகளை, உங்களினதும் விடுதலை இயக்கங்களினதும் நம்பிக்கைக்கு உரிய வகையில் நிறைவேற்றியுள்ள மகிழ்ச்சியுடன்,

கடந்த ஆண்டின் செயல் அறிக்கையை உங்கள் முன்பு சமர்ப்பிக்கின்றேன்.

நன்றி,

தோழமையுடன்

[signature]

நாக ஸ்ரீ கெங்காதரன்
செயலாளர்
E.S.C

01.12.85.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**அமைப்பின் உருவாக்கம்** .........

1982 ம் ஆண்டின் நடுப்பகுதியில் விடுதலைப் போராளிகளான தோழர்கள் குட்டிமணி, ஜெகன் ஆகியோருக்கு சிறீலங்கா இனவாத பாசிச அரச நீதிமன்றம் மரணதண்டனை விதித்தபோது அதுதொடர்பான பிரசாரத்தை அதாவது சிறீலங்காவின் கொடிய தரகுமுதலாளித்துவ அரசு தமிழ்பேசும் மக்களுக்கு இழைத்துவரும் கொடுமைகளை உலகமக்களுக்கு தெரியப்படுத்தும் நோக்குடன் CAMPAIGN FOR THE RELEASE OF EELAM POLITICAL PRISONERS ( C R E P P ) எனும் பிரசாரக்குழு இலண்டனில் உருவாக்கப்பட்டது.

1983 யூலையில் நடந்த இனக்கலவரத்தின் விளைவாகு, உலகரீதியான பிரச்சாரப்பணியின் அவசியத்தையும், முக்கியத்துவத்தினையும் உணர்ந்து இவ்வமைப்பு விரிவுபடுத்தப்பட்டு. அவ்வேளையில் CREPP ஆனது EELAM SOLIDA - - RITY CAMPAIGN ( E.S.C. ) எனப்பெயர்மாற்றம் செய்யப்பட்டது. தொடர்ந்து இன்றுவரை இவ்வமைப்பு பிரச்சாரப்பணிகளைச் செய்து வருவது நீங்கள் அறிந்ததே.

**ஒழுங்கு வடிவமைக்கப்பட்டமை** .................

ESC எனப்பெயர் மாற்றம் செய்யப்பட்டபோதிலும் இவ்வமைப்பு ஒரு ஒழுங்குடன் செயற்படாமையினையும், மேலாக தமிழ்பேசும் மக்களின் தேசிய விடுதலைப்போராட்டத்தை பிரதிபலிக்கும் விதத்தில் பிரசாரத்தை மேற்கொள்ளத்தவறியமையும் குறைபாடுகளாகக்கண்டு, அவற்றைச் சீர்திருத்தும் நோக்குடன், செயற்குழுவினர் ESC யினை ஒரு விதிமுறைகள் கொண்டஒழுங்கு வடிவில் அமைந்த அமைப்பாகக் கட்டியமைக்கும் முயற்சிகளை மேற்கொண்டனர். இதன் விளைவாக 19.11.84 ம் திகதியன்று நடைபெற்றESC ன் வருடாந்த பொதுக்கூட்டத்தில் அறிமுகம் செய்யப்பட்ட அமைப்புவிதிகளுக்கமைய ESC ஒரு ஒழுங்குவடிவில் அமைந்த அமைப்பாக இயங்கிவருகிறது.

**E S C ன் பாரிய கடமைகள்** ..........

இன்று இம்மண்டபத்தில் கூடியுள்ளவர்கள் அனைவரும் விடுதலைப்போராட்டத்தின் ஆதரவாளர்கள் மட்டுமல்லாது, அதன் முக்கியமான பங்காளிகளாக இருப்பதனை யும் நாம் கருத்திற்கெடுத்தல் வேண்டும். இவர்கள் தான் ESC யின் உறுப்புகளாக செயற்பட்டு வருகின்றார்கள் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

ஈழத்தில் போராடுகின்ற விடுதலை அமைப்புகளின் உறுப்பினர்களே ESC யின் அங்கத்தவர்களாகவும் இருக்கின்ற இந் நிலைமைதான் ESC ஐ ஏனைய நாடுகளில் நடைபெற்றுவரும் விடுதலைப்போராட்டங்களை ஆதரிக்கும் Solidarity அமைப்புகளிலிருந்து வேறுபடுத்திக்காட்டுகிறது. இதன்காரணமாக ESC ன் கடமைகளும் பொறுப்புகளும் கூட வேறுபடுத்திக்காட்டுகின்றன. இந்நடைமுறைச்சிக்கல்களை வெளிநாட்டில் வாழ்கின்ற தமிழ்பேசும்மக்கள் ESC ன் பணிகளில் கூடியபங்களிப்பினை அளிப்பதனால் மட்டுமே களையப்படலாம். இதுகருதியே தமிழ்பேசும்மக்களின் சுயநிர்ணய உரிமைக்கான விடுதலைப் போராட்டத்தை ஏற்றுக்கொள்ளும் எவரும் ESC ல் உறுப்பினர் ஆகும் தகுதி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கொண்டவர் என அமைப்பு விதிகள் விரிவாக வரையறுக்கிறது.

மேலும் இலங்கையில் வசிக்கின்ற தமிழ்த் தேசிய இனம் இன்று நடாத்திக் கொண்டிருக்கும் விடுதலைப்போராட்டத்தில் வெற்றி பெறுவதற்கு பின்வரும் காரணிகள் அவசியமாகும்.

1. தமிழ்த்தேசிய இனத்தின் புரட்சிகர அரசியல் நிலைப்பாடு.
2. விடுதலை அமைப்புகளது புரட்சிகர வழிநடத்துகையும், அவர்களின் தன்னலமற்ற பங்களிப்பும்,
3. சிறீலங்கா இனவாத அரசினது பலம், பலவீனம் சார்ந்த நிலைப்பாடுகள்.,
4. இந்தியாவினது முக்கியத்துவமும், அதன் பங்களிப்பும்,
5. எமது விடுதலைப்போராட்டத்திற்கு சிங்களமக்களினதும். அவர்களிடையே செயற்படுகின்ற முற்போக்கு சக்திகளினதும் ஆதரவுகள்,
6. வெளிநாடுகளின் ஆதரவுகள்.

மேற்குறிப்பிட்டவற்றில் முதல் இரண்டுகாரணிகளையும் செயற்படுத்தும் பாரிய பொறுப்புகள் விடுதலை அமைப்புகளையே சார்ந்துள்ளது. ஏனையவற்றை குறிப்பாக சிங்கள மக்களினதும் முற்போக்கு இயக்கங்களினதும் ஆதரவினை திரட்டுதல், வெளிநாடுகளின் ஆதரவுகளை பெறுதல் போன்றவைகளை வெளிநாடுகளில் வசிக்கின்ற தமிழ்மக்களாகிய நாமே ஏற்றுக வேண்டும். அப்பொறுப்புகளை சுமந்து நிற்கும் நாம் ' குறுகிய இயக்க வாதங்கள் ' தனிநபர் வளர்ச்சி, புகழ்வெறி இவைகளுக்கு அப்பாற்பட்டு ஒற்றுமையான உணர்வுடன் ESC ஐ கட்டியெழுப்புவதன் மூலமே இவற்றை சரிவர நிறைவேற்ற முடியும். என கூறிவைக்க விரும்புகிறேன்.

**தென்னிலங்கை முற்போக்கு சக்திகளுடனான தொடர்பு ..........**

தென்னிலங்கையில் காணப்படும் முற்போக்கு சக்திகளின் ஆதரவும் அனுசரணையும் இன்றி சிங்கள மக்களிடையே செல்வதோ அன்றி அவர்களை எமது விடுதலைப்போராட்டத்தினை அங்கீகரிக்க முயல்வதோ நடைமுறையில் சாத்தியமற்றதாகும். ஏனெனில் கடந்த காலத்தில் இருபகுதியினதும் அரசியல் கட்சிகள் இனவாதத்தினை வளர்த்த காரணத்தினால் தமிழ் பேசும் மக்களுக்கும், சிங்கள மக்களுக்கும் இடையிலான சந்தேக மனப்பான்மை மிகவும் விரிவுற்று காணப்படுகிறது.
மக்கள் மட்டத்திலும், இயக்கங்களின் அளவிலும் இத்தகைய சந்தேகத் தன்மை தொடர்ந்தும் இருந்துவருவது ஆரோக்கியமற்ற அரசியல் நிலைமையே உருவாக்கும். இன்றைய நிலையில் ஈழ விடுதலை அமைப்புகள் தென்னிலங்கை முற்போக்கு சக்திகளுடன் தொடர்புகொண்டு செயற்படத் தயங்குகின்றன. இவ்வாறே அவர்களும் விடுதலை அமைப்புகளுடன் பொதுத்திட்ட அடிப்படையில் இணைந்து செயற்படத்தயங்குகின்றன. இதற்கு பரஸ்பர புரிந்துணர்வு இன்மையே காரணமாகும். இவர்களிடையே ' புரிந்துணர்வினை ' ஏற்படுத்தும் இணைப்புப்பாலமாக



தொழிற்பட்டு, அவர்களிடையே நம்பிக்கையினை வளரச்செய்து போராட்டத்தை முன்னெடுக்கும் பாரிய பொறுப்பு எம்மைச் சார்ந்துள்ளது.

**வெளிநாடுகளின் ஆதரவு ...............**

உலகெங்கும் நடந்துகொண்டிருக்கும் அடக்குமுறைகள், ஒன்புறுத்தல்களுக்கெதிரான விடுதலைப்போராட்டங்களுக்கு " நிபந்தனையற்ற ஆதரவு " சோசலிச நாடுகளாலேயே வழங்கப்படுகின்றன. முதலாளித்துவ நாடுகளைப் பொறுத்தவரை அங்கு காணப்படும் முற்போக்கு சக்திகளிடமிருந்து மட்டுமே இவ்விதமான ஆதரவினை நாம் பெற முடியும் என்பதே வரலாற்று உண்மையாகும்.
எமது தேச விடுதலைப் போராட்டத்திற்கு மேற்குறித்த வகையிலான ஆதரவுகளைப் பெற்றுத்தருகின்ற கடமையும் பொறுப்பும் எமக்கே உரியதாகும். எனினும் நாம் வாழ்கின்ற பகுதிகளில் கடந்த காலங்களில் இத்தகைய சக்திகளை இனம் காண்பதிலும் அவர்களுடன் உத்தியோகபூர்வமான தொடர்புகளை மேற்கொள்வதிலும் நாம் முழுக்கவனத்தையும் செலுத்துவது நடைமுறையில் சாத்தியப்படவில்லை. எனினும் இவ்வாறான பணிகளைச்செய்துவரும் தோழர்கள் ஒன்றுபட்டு ஒரேமுகமாக அப்பணிகளைச் செய்வதற்கான தளமாக ESC ஐ கடந்த ஓராண்டு காலத்தினுள் மாற்றியமைத்துள்ளோம் என்பதினை இங்கு வலியுறுத்த விரும்புகிறேன்.

**இவை சார்ந்த பணிகளுள் சில ...............**

சிங்கள மக்களின் மத்தியிலே செயற்படுகின்ற முற்போக்கு சக்திகளில் எமது விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவு தருபவர்களில் தோழர். வாசுதேவ, தோழர் எட்மன்ட் சமரக்கொடி ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்களை ESC யின் பிரச்சாரப்பணிகளில் பங்களிக்க வைத்ததன் மூலம் விடுதலை அமைப்புகளுக்கும், தமிழ்பேசும் மக்களுக்கும் நண்பர்களாக அறிமுகம் செய்து வைத்துள்ளோம். இவ் அறிமுகம் விடுதலை அமைப்புகளுக்கும், ~~இந்த~~ தென்னிலங்கை முற்போக்கு சக்திகளுக்கிடையிலான தொடர்புகளின் ஆரம்பமாக அமைய வேண்டுமென வலியுறுத்துகின்றோம்.
எம்மால் நடத்தப்பட்ட BLACK JULY ஊர்வலத்தில் தோழர் வாசு கலந்துகொண்டு உரையாற்றியமையை சிறீலங்கா முதலாளித்துவ பத்திரிகைகள் வேறுவிதமாக திரிபுபடுத்தி வெளியிட்டு சிங்கள மக்கள் மத்தியில் அரசியல் பிரச்சனையை உருவாக்கியமையினையும் இது தொடர்பான அறிக்கை NSSP யினால் வெளியிடப்பட்டமையும், சிங்கள மக்கள் மத்தியிலே எமது பிரச்சனையை ஓரளவு விளங்கவைக்க வழி அமைத்துத்தந்துள்ளது.
முன்புபோல அன்றி EPRLF, EROS, TELO, NLFT, ஆகிய விடுதலை அமைப்புகள் ESC ஐ கடந்த ஒரு வருடகாலமாக அங்கீகரித்து செயற்பட்டு வருதல், PLOT ன் மாணவர் அமைப்பான TESO, ESC யின் பிரச்சாரப்பணிகளில் ஒத்துழைத்தல், அண்மையில் TULF முழுமையான ஒத்துழைப்பினை வழங்கத் தொடங்கியுள்ளமை ஆகியன கடந்த ஆண்டில் அடைந்த முக்கிய மாற்றம் ஆகும்.
மேற்கொண்ட செயற்பாடுகளில் நாம் செய்த பிரச்சார பணிகளை விட எமது விடுதலைப்போராட்டத்திற்கு அனுசரணையாக அமைந்த முக்கிய காரணிகள் என்பதனை இங்கு தெரியப்படுத்துகின்றோம்.

www.tamilarangam.net



<u>செயற்குழுவின் விபரங்கள்</u> .............

19.11.84 அன்று முன்னைய அமைப்பாளர்களில் ஒருவரான திரு. பாலசேகரத்தின் தலைமையில் நடைபெற்ற வருடாந்த பொதுக்கூட்டத்தில் புதிய யாப்பு விதிகள் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இவற்றின் பிரகாரம், விடுதலை அமைப்புகளான EPRLF, EROS, LTTE, PLOT, TELO, TULF ஆகியவைக்கு செயற்குழுவில் நிரந்தர உறுப்புரிமை வழங்கப்பட்டது. மேலும் ESC யின் தலைவராக தோழர். ஆறுமுகம் அவர்கள் பெரும்பான்மை வாக்குகளால் தெரிவுசெய்யப்பட்டார். தொடர்ந்து செயலாளராக தோழர். கெங்காவும், பொருளாளராக தோழர் பாலசுப்பிரமணியமும் ஆகியோரும் உதவி செயலாளர்களாக தோழர்கள் காசு, ரவி ஆகியோரும் ஏகமனதாக தெரிவுசெய்யப்பட்டனர்.

<u>புதிய செயற்குழுவின் தெரிவின் பின்னான நிகழ்ச்சிகள்</u> .............

** கடந்த ஓராண்டினுள் 16 செயற்குழுக்கூட்டங்கள் நடாத்தப்பட்டன. செயற்குழு உறுப்பினர்களில் பெரும்பாலோர் சமுகமளிக்காத போதிலும் கூட்டங்கள் ஒழுங்காக நடைபெற்றன.

** 20.4.85, 7.10.85 ம் திகதிகளில் இரண்டு சிறப்புக் கூட்டங்கள் நடைபெற்றன.

** 12.12.84 அன்று புதன்கிழமை BBC தொலைக்காட்சி நிலையம் முன்பாக தமிழர்களின் பிரச்சனை தொடர்பான தகவல்களை திரித்தும் தவறுகவும் வெளியிடுவதனை கண்டித்து அதன் முன்பாக எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று எம்மால் நடத்தப்பட்டது.

** 12.1.85 ம் திகதி சனிக்கிழமை லண்டன் வீதிகளினூடு சிறீலங்கா அரசு எதிர்ப்பு ஊர்வலம் நடத்தப்பட்டது. ( குளிரையும் பொருட்படுத்தாது கலந்து கொண்ட தமிழ் மக்களுக்கு எமது நன்றிகள் ) இவ் ஊர்வலத்தின் போது சிறீலங்கா அரசுக்கு செய்யும் உதவிகளை நிறுத்துமாறு பிரித்தானிய அரசினைக் கோரும் விண்ணப்பம் ஒன்று தயாரிக்கப்பட்டு ஊர்வலத்தில் பங்களித்தவர்களின் கையொப்பங்களுடன் பிரித்தானிய பிரதமமந்திரியிடம் கையளிக்கப்பட்டது.

** பிரித்தானிய பிரதமரின் சிறிலங்கா விஜயத்தை நிறுத்தக்கோரி 19.11.85 முதல் 22.11.85 வரை தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகள் கலந்துகொள்வதான ஆர்ப்பாட்டமும், 23.11.85 ல் சகலரும் கலந்து கொள்வதான ஆர்ப்பாட்டமும், 10 DOWNING STREET இற்கு அருகாமையில் நடாத்தப்பட்டது. இதன்பேரது பிரதமரின் இலங்கை விஜயத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் விண்ணப்பம் ஒன்று தயாரிக்கப்பட்டு கையளிக்கப்பட்டது. தெரிவுசெய்யப்பட்டவர்கள் கலந்து கொண்ட நான்கு நாட்களில் இரண்டு நாட்களில் மட்டுமே ஆர்ப்பாட்டம் ஒழுங்காக நடைபெற்றது என்பது வருத்தத்திற்குரியதாகும். மேலும் சகலரும் கலந்து கொள்வதான ஆர்ப்பாட்டம் 23.11.85ம் திகதியன்று தமிழர்கள் பலர் கலந்து கொண்ட நிகழ்ச்சியாக நன்கு அமைந்தது.

** கடந்த மாதம் பாலஸ்தீன விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து FRIENDS OF PALESTINE னரால் நடாத்தப்



பட்ட ஊர்வலத்தில் உத்தியோக பூர்வமாக கலந்துகொண்டோம்.

** இலங்கையில் கைதுசெய்யப்பட்ட தொழிலாளர் தலைவர்களை விடுதலை செய்யக்கோரி NSSP, LABOUR GROUP கூட்டாக இலங்கை ஸ்தானிகராலயத்திற்கு முன்பாக நடத்திய ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டோம்.

** ஒவ்வோர் வெள்ளிக்கிழமையும் நிறவெறி தென்னாபிரிக்க தூதரகத்திற்கு முன்பாக நடைபெறும் ஆர்ப்பாட்டங்களில் ஒன்றின் போது நாம் எமது செம்பதாகையுடன் ( BANNER ) கலந்து கொண்டமையும் தொடர்ந்து இவ் ஆர்ப்பாட்டங்களில் எமது அங்கத்தினர் பங்களித்து வருவதும் குறிப்பிடத்தக்கது.

** மேமாதம் 26 ம் திகதி சனிக்கிழமை TRAFALGAR SQUARE ஆரம்பித்து லண்டன் வீதிகளில் உலகளாவிய பிரச்சாரம் ஒன்று நடத்தப்பட்டது. ( பெரும் மழைக்கு மத்தியிலும், கலந்து கொண்ட சகோதரிகளின் வேண்டுகோளுக்கிணங்க ஊர்வலம் இடைநிறுத்தப்படாது தொடர்ந்து நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. ) இரு தொழிற்கட்சி பாராளுமன்ற பிரதிநிதிகள் உட்பட ஏனைய விடுதலை அமைப்புகளின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டு உரையாற்றினர்.

** தமிழ் அகதிகளை பாரபட்சமாக நடத்தப்படுவதனை கண்டிக்கும் நோக்குடன் யூன்18 ம் திகதி செவ்வாய்க்கிழமை HOME OFFICE முன்பாக ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்பட்டது.

** தமிழர்களின் மீதான ஒடுக்கு முறைகளை வெளியுலகுக்கு எடுத்துக்காட்டும் நோக்குடன் தொடர்ச்சியாக முறையே யூன் 29 ம் திகதி சனிக்கிழமை TRAFALGAR SQUARE இலும் JULY 13ம் திகதி சனிக்கிழமை பிரதமர் இல்லத்தின் முன்பாகவும் JULY 19ம் திகதி வெள்ளிக்கிழமை இலங்கை ஸ்தானிகராலயத்திற்கு முன்பாகவும் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டது. ( போதிய அளவு ஆதரவாளர்கள் கலந்து கொள்ளாமையின் காரணமாகவும் , தொடர்ந்து ஒவ்வொரு ஆர்ப்பாட்டத்தின் போதும் பலத்த மழை பெய்தமை காரணமாகவும் இவ் ஆர்ப்பாட்டங்கள் எதிர்பார்த்த அளவு வெற்றியளிக்கவில்லை. )

** 'யூலைக்கலவரம்' ஈழத்தில் இடம்பெற்ற படுகொலைகள், இன ஒழிப்பு நிகழ்ச்சிகள் ஆகியவற்றை நினைவுகூரும் விதமாக BLACK JULY ஊர்வலம் 27.7.85 சனிக்கிழமை இடம் பெற்றது. HYDE PARK இல் ஆரம்பித்து JUBILEE GARDENS ல் முடிவடைந்த இவ் ஊர்வலத்தில் 2 வாத்தியக்குழுவினரும் பெருமளவு மக்களும் கலந்து கொண்டனர். ஊர்வலத்தின் இறுதியில் இடம் பெற்ற கூட்டத்தில் விடுதலை இயக்க பிரதிநிதிகளும் உரையாற்றினார்கள். நவ சமசமாஜக் கட்சியின் தலைவர் தோழர். வாசுதேவ நாணயக்கார சிறப்புரையாற்றினார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பிரச்சார அடிப்படையில் செப்டம்பர் 16ம் திகதி ஞாயிற்றுக்கிழமை TRAFALGAR SQUARE இல் ஆரம்பமான ஒரு ஊர்வலம் எம்மால் நடாத்தப்பட்டது. தோழர். JEREMY CORBYN எம்.பி யும் மற்றும் விடுதலை இயக்கபிரதிநிதிகளும் உரையாற்றினார்கள். ( ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கையை பொறுத்தளவில் இவ் ஊர்வலம் வெற்றியளிக்கவில்லை. என்றே கருதுகிறோம். )

- தமிழ் மக்களுக்கு இடம் பெறுகின்ற அநியாயங்களை உலகுக்கு எடுத்துச் செல்லவும், விடுதலைப்போராட்டத்தை நியாயப்படுத்தவுமான நடவடிக்கைகளையும், பிரச்சாரங்களையும் செய்து வருகின்றோம். இவற்றின் விளைவாக, போராட்டத்தினை பாதிக்கும் ஆபத்துக்களை ஏற்படுத்தும் தன்மையான, அரசியல் படுகொலைகளை பகிரங்கமாக கண்டிக்கும் கட்டத்தை ESC அடைந்துள்ளது. இவற்றின் அடிப்படையில், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான திரு. வி. தருமலிங்கம், திரு. மு. ஆலாலசுந்தரம் ஆகியோர் படுகொலைசெய்யப்பட்டமையினையும், ஏனைய அனைத்து அரசியல் படுகொலைகளையும் பகிரங்கமாக கண்டிக்கும் பொதுக்கூட்டம் ஒன்று INDIAN Y.M.C.A காந்திமண்டபத்தில் இடம்பெற்றது. தோழர் ஆறுமுகத்தின் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் EPRLF, EROS, TELO, NLFT ஆகிய இயக்கங்களின் பிரதிநிதிகளும், தோழர் இராஜநாயகமும் ESC யின் செயலாளரும் அரசியல் படுகொலைகளைக் கண்டித்து பேசினார்கள். மேலும் பொதுமக்களில் இருவர் கலந்து கருத்துரை வழங்கினர்.

- SWITZERLAND க்கு அகதிகளாக வந்த தமிழர்களை நாட்டைவிட்டு வெளியேற்ற SWITZERLAND அரசு மேற்கொண்ட முயற்சிகளை நிறுத்தும் நோக்கில் கடந்த யூலை மாதத்தில் அவ் அரசுக்கு தந்தியொன்று கொடுத்திருந்தோம்.

- மேலும் சென்ற மாதம் விடுதலைப்போராளி சந்ததியார் இனம் தெரியாத நபர்களால் கைதுசெய்யப்பட்டமையை தொடர்ந்து அவரை விடுவிக்கக் கோரி இந்தியப் பிரதமருக்கு தந்தி கொடுக்கப்பட்டது.

- HOLLAND ல் உள்ள தமிழ் அகதிகளை SEDEC எனும் கிறிஸ்தவ நலன்புரி அமைப்பின் மேற்பார்வையில் இலங்கையின் சிங்கள குடியேற்றப்பகுதியில் குடியேற்றும் முயற்சி சிறீலங்கா அரசினாலும் HOLLAND அரசினாலும் மேற்கொள்ளப்பட்டபோது தொடர்புள்ள ஸ்தாபனங்களுக்கு இவற்றை நிறுத்தக்கோரி கடிதங்கள் அனுப்பினோம்.

- தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் அவர்கள் சமீபத்தில் லண்டன் வந்திருந்தபோது ESC யின் கலந்துரையாடல் கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டார். த.வி. கூட்டணியின் முக்கியமான பிரமுகர்களில் ஒருவரான அவர் ESC யின் கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டது இதுவே முதற்தடவையாகும்.

- தீவிர இடதுசாரியும், தமிழ்மக்கள் சார்பாக மிக நிதானமான கொள்கையை எப்போதும் கடைப்பிடித்துவருகின்ற தோழர். எட்மண்ட் சமரக்கொடி சமீபத்தில் லண்டன் வந்திருந்தபோது ESC கலந்துரையாடலில் பங்குபற்றினார். ( மிகவும் பயனுள்ள வகையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் பெருமளவில் அநேகமான அங்கத்தினர்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும் )

புதிய செயற்குழுவின் முயற்சியால் மேற்கொண்ட பிரச்சாரங்களை இதுவரை குறிப்பிட்டேன்.



## எதிர்காலக் கடமைகள் :

புதிய ஆண்டின் ஆரம்பத்தில் நாம் மிகவும் தேசியமானதும் அவசியமானதுமான பணிகளை நிறைவேற்ற வேண்டி உள்ளது என்பதை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகின்றேன். அவையாவன

** E.S.C தனது பொறுப்புக்களை சிறப்புற செய்வதற்கு, பணம் போதாத நிலையில் நாம் புறக்கணித்தலாகாது. எனவே அந்நிலையில் E.S.C ஐ விஸ்தரிப்படுத்தும் பாரிய கடமை புதிய தெரிவாகத் தேவையை தெரியாத பொறுப்பாளரைச் சார்ந்துள்ளது.

** இங்கிலாந்தில் செயற்பட்டு வருகின்ற ஏனைய நாடுகளின் ஸ்தாபன அமைப்புக்களுடனும் முற்போக்குச் சக்திகளுடனும் இணைந்து செயற்படவும், கூட்டான பிரச்சாரங்களை மேற்கொள்ளவும் நாம் முயன்றிட வேண்டும்.

** இங்கு வாழ்கின்ற தமிழ் மக்கள், எமது வி/போராட்டத்தின் விளைவுகளால் பாதிப்படைகின்ற சூழ்நிலைகளை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. இவ் ஆரோக்கியமற்ற சூழ்நிலையை மாற்றும் பொறுப்பு எம்மைச் சார்ந்துள்ளது, என்பதை நாம் கவனத்திற் கொள்ள வேண்டும்.

** தமிழ் மக்களின் பொதுநிறுவனங்களாக இங்கிலாந்தில் தொழிற்பட்டு வருகின்ற CBF/TIC, SCOT, CCTA போன்ற அமைப்புக்கள் நிபந்தனையின்றி E.S.C யின் பிரச்சாரப் பணிகளுக்கு உதவி செய்யத்தக்கதான சூழ்நிலைகளை நாம் உருவாக்கியாக வேண்டும்.

** E.S.C யின் அமைப்பையும், பிரச்சாரங்களையும் இந்நாட்டு முற்போக்கு நிறுவனங்களையும் முற்போக்காளர்களையும் இணைத்து செயலாற்றும் சூழ்நிலையை ESC யால் உருவாக்க வேண்டும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நன்றியை தெரிவித்துக் கொள்ளும் அதே வேளையில் தமிழ் மக்களின் நம்பிக்கைக்கு பாத்திரமான விடுதலை அமைப்புகளின் கருத்துக்களை மேற்கூறிய நடைமுறையின் அடிப்படையில் இணைந்து செயற்படுமாறு கோரி ESC முயற்சி செய்து வருவதை நாம் அறிவோம். எனினும் மேற்கூறிய நான்கு வி/அமைப்புக்களைத் தவிர ஏனையவை அதுசார்பாக பாராமுகமாகவும் அக்கறையின்றியும் இருப்பதை யிட்டு நாம் வேதனை அடைகின்றோம். இவ்வாறு E.S.C யின் பணிகளை புறக்கணிப்பது நியாயமற்றது என்பதால், இதுவரையில் இணையாத அமைப்புக் களின் தலைமைப் பீடங்களுக்கு நேரடியாக இது சார்ந்த வேண்டுகோளை சமர்ப்பிக்கும் சந்தர்ப்பமாக இதனை பயன்படுத்த விரும்புகின்றேன்.

" தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் தலைவர் தோழர். வே. பிரபாகரன் அவர்களே, தமிழ் ஈழ மக்கள் விடுதலைக் கழகத்தின் செயலதிபர் தோழர். க. உமாமகேஸ்வரன் அவர்களே.. தமிழ் ஈழத்தில் நடத்திக்கொண்டிருக்கும் விடுதலைப் போராட்டத்தை சர்வதேச அரங்குகளில் வென்றெடுக்கும் முக்கிய பணியாக ESC யினரான நாம் செய்துவருகின்றோம். இதுசார்பாக எமக்கு ஆதரவாக செயற்படுமாறு அனைத்து வி/அமைப்புக்களின் கருத்துக்களையும் நாம் கோரி இவ்வமைப்புக்களுக்கும் வருகின்றோம். ஆனால் தங்கள், இரு அமைப்புகள் மட்டுமே இணைந்து ~~செயற்படுமாறு~~ செயற்பட மறுத்துவருகின்றன. வரலாற்று முக்கியம் கொண்ட இப் பிரச்சாரப் பணிகளில் ESC யினருடன் இணைந்து செயற்படும்படி தங்கள் கருத்துக்களை வலியுறுத்துங்கள்" என, ஏற்கனவே ESC யுடன் இணைந்து செயற்படும் ஏனைய வி/அமைப்புக்களின் சார்பாகவும் E.S.C யின் சார்பாகவும் இவ் ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் உத்தியோக பூர்வமாக வேண்டிக் கொள்கின்றேன்.



*** எமது போராட்டத்தை ஆதரித்து வருகின்ற பாராளுமன்ற உறுப்பினர்களையும், தொழிற் சங்க தலைவர்களையும் அணிதிரட்டிய ஸ்தாபனரீதியாக செயற்பட வைத்தல் வேண்டும்.

*** எமது போராட்டம், எம்மீதான தேசிய அடக்குமுறைகள் போன்றவையை எடுத்துரைக்கும் பிரச்சார வெளியீடுகளை E.S.C வெளியிடல் வேண்டும்.

*** மாதம் ஒருதடவையாவது ESC யினால் வெளிநாட்டில் வாழ்பவர்களுடன் தொடர்புகளைப் பேணுவதற்காக செய்திக் கோவை ஒன்று [NEWS BULLETIN] வெளியிடப்படல் வேண்டும்.

மேற்குறித்த முக்கிய பணிகளை, அங்கத்தினர்களும் விடுதலை இயக்கப்பிரதிநிதிகளும் கவனத்திற் கொண்டு, புதுவருடத்தின் போது செயலாற்ற புதிய நிர்வாக சபைக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என வேண்டிக் கொள்கின்றேன்.

ESC யின் உத்தியோக பூர்வமாக பங்களிக்காத வி/அமைப்புகளுக்கு நேரடி வேண்டுகோள் ---,

உலக அரங்குகளில் எமது வி/போராட்டத்தை நியாயப் படுத்தல், சர்வதேச முற்போக்கு சக்திகளை அதற்கு ஆதரவு தரும் வகையில் வென்றெடுத்தல், எம் மக்கள் அனுபவித்து வருகின்ற கொடுமைகளை உலக அரங்குகளில் வெளிக் கொண்டு வருதல் போன்ற பணிகளை

தனியொரு வி/அமைப்பு நிறைவேற்றி வைப்பது என்பது நடைமுறையில் சாத்தியமற்றது என்பதால் அவற்றை நிறைவேற்றும் பாரிய கடமையை செய்துவரும் ESC க்கு சகல வகைகளிலும் ஆதரித்து வரும் EPRLF, ERDS, NLFT, TELO ஆகிய வி/அமைப்புகளுக்கு எமது

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நன்றியுரை !

கடந்த ஓராண்டு காலமாக அங்கத்தினர்களாகிய நீங்கள் அனைவரும் வெவ்வேறு வகைகளால் என்னுடன் ஒத்துழைத்து வந்துள்ளீர்கள். உங்களால் இவர் எனக்கு பக்கபலமாக செயற்பட்டு வந்துள்ளீர்கள். இவ்வாறான அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள் உரித்தாகுக.

தலைவர் தோழர் ஆறுமுகம் அவர்கள் பெருமையான ஒத்துழைப்பையும், பயனுள்ள ஆலோசனைகளையும் தந்து எனது பணிகளுக்கு ஊக்கமும் உற்சாகமும் ஊட்டிவந்துள்ளார் என்பதனை இச்சந்தர்ப்பத்தில் நான் நன்றியுடன் நினைவு கூருகின்றேன்

பொருளாளர் தோழர் பாலசுப்பிரமணியம் அவர்கள் தனது சொந்தப் பிரச்சனைகளுள் பலவற்றின் மத்தியிலும் E.S.C யின் பணிகளை சிறப்புற செய்துள்ளார்.

மேலும் உதவிச் செயலாளர்களில் ஒருவரான தோழர் ராஜா தனக்குரிய இயக்கக் கடமைகளின் மத்தியிலும், ESC யின் பொறுப்புகளை பகிர்ந்து செயற்பட்டு வந்துள்ளார். இவர்களுக்கு எமது நன்றிகள் உரித்தாகுக.

மேலும் EROS, EPRLF, TELO, NLFT ஆகிய ஏனைய அமைப்புக்கள் சகல வழிகளிலும் எமக்கு ஒத்துழைப்பு நல்கி வருகின்றன. குறிப்பாக NLFT மிகக் குறுகிய காலமே இங்கு செயற்பட்டு வந்த போதிலும் ESC யின் பணிகளில் குறிப்பிடத்தக்க அளவு செயற்பட்டுவந்துள்ளமையை இங்கு குறிப்பிட்டு அனைத்து ஏனைய இயக்கங்களுக்கும் அதன் பிரதிநிதிகளுக்கும் நன்றி கூறுகின்றேன்.

இறுதியாக, சகல வழிகளிலும் எமக்கு ஒத்துழைப்பு நல்கினதோடு ESC யின் பணிகளைச் செயலாக்க உதவிய அனைவருக்கும் நன்றி கூறுவதுடன், உங்கள் பங்களிப்பு தொடர்ந்தும் இருக்க வேண்டும் என வேண்டிக்கொண்டு விடைபெறுகின்றேன்.